

# යහපත් ජාත්‍යන්තර සම්බන්ධතාවයට විධිමත් විදේශ ප්‍රතිපත්තියක් අවශ්‍යයි

## சருவதேச உறவுகளுக்கு ஒழுங்கான வெளிநாட்டுக் கொள்கை அவசியமாகும்

# A SOUND FOREIGN POLICY – A VITAL NEED FOR GOOD INTERNATIONAL RELATIONS

BKT 0160
26 | 08 | 2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# බණ්ඩාරනායක ජාත්‍යන්තර අධ්‍යයන මධ්‍යස්ථානයේ උපාධි ප්‍රදානෝත්සවයේ දී ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා විසින් පවත්වන ලද කථාව

1989 සැප්තැම්බර් මස 22 වන දින

බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාව

මෙම වැදගත් අවස්ථාවේ මූලාසනය දැරීමට මට ආරාධනය කිරීම ගැන, මම පළමුකොටම තමුන්නාන්සේලාට ස්තුති කරනවා. අද පැවැත්වෙන්නේ බණ්ඩාරනායක ජාත්‍යන්තර අධ්‍යයන මධ්‍යස්ථානයේ 8 වන උපාධි ප්‍රදානෝත්සවයයි. තමුන්නාන්සේලා කොතරම් අනලස්ව ජාත්‍යන්තර සබඳතා හැදෑරීම කරගෙන ගොස් තිබෙනවාද යන්න, අපට මෙම අවස්ථාවන් නිසා සිහිපත් වෙනවා. තමුන්නාන්සේලාගේ ආයතනයේ අවුරුදු 13 ක් වන ඉතිහාසයේ දී, ජාත්‍යන්තර සබඳතා අඛණ්ඩව අධ්‍යයනය කිරීම අතින් තබා තිබෙන වාර්තාව ගැන මම තමුන්නාන්සේලාට මගේ ප්‍රශංසාව පළ කරනවා. මෙම ජයග්‍රහණයට සමානවන ජයග්‍රහණයක් ලබාගත්ත උසස් අධ්‍යාපන ආයතන එතරම් සංඛ්‍යාවක් අපේ රටේ ඇතැයි කියා මා කල්පනා කරන්නේ නැහැ.

මේ අළුතක් වනතුරුම, ජාත්‍යන්තර සම්බන්ධතා හැදෑරීම ශ්‍රී ලංකාවේ ස්වාධීන ශික්ෂණයක් හැටියට පිළිගෙන තිබුණේ නැහැ. මේ අතින් තමුන්නාන්සේලාගේ මධ්‍යස්ථානය වඩාත් නවීන මඟක් ගන්නට පුරෝගාමීව තිබෙන බව මට පෙනී යනවා. ජාත්‍යන්තර සම්බන්ධතා හැදෑරීම දැන් ස්වාධීන අධ්‍යයන ක්ෂේත්‍රයක් හැටියට, විශේෂ ශික්ෂණයක් හැටියට, අපේ උසස් අධ්‍යාපන ක්‍රමය තුළ වැඩි වැඩියෙන් පිළිගැනෙන්නටත්, පැතිරෙන්නටත් පටන්ගෙන තිබෙනවා.

නවීන ලෝකයේ ප්‍රධාන ලක්ෂණයක් තමයි, එහි ජාත්‍යන්තර ස්වභාවය. මොනම ජාතියකටවත්, මොනම රාජ්‍යයකටවත් තවදුරටත් අනිකුත් ජාතීන්ගෙන්, රාජ්‍යයන්ගෙන් වෙන්ව සිටින්නට බැහැ. අද

ලෝකය බොහෝසෙයින් අන්‍යෝන්‍ය වශයෙන් රඳාපවතින තත්ත්වයකයි පවතින්නේ. එමනිසා තමන්ගේ කටුව තුළටම නතුව සිටින්න කල්පනා කරන රටවල්වලට සිදුවෙන්නේ එකතැන පල්වෙන, කොන්වුණු තත්ත්වයක ජීවත් වෙන්නයි. සමස්ත ලෝකයම සැළකිල්ලට ගෙන කටයුතු කළයුතු වන මේ තත්ත්වය තුළ විදේශීය ප්‍රතිපත්තිය ඉතා විශාල වැදගත්කමක් ගන්නවා. ඥානවන්ත නොවන, කරුණු දැනගැනීමේ දූරදර්ශී ගත්කමින් පුළුල්බවට නොපත් විදේශ ප්‍රතිපත්තියක් නිසා රටක ප්‍රතිරූපය කෙලෙසෙන්න පුළුවන්. ඥානවන්ත විදේශ ප්‍රතිපත්තියක් කියන්නේ මොකක්ද ? එය, ඇත්තවශයෙන්ම, ප්‍රබල ජාතික අවශ්‍යතාවලත්, ජාත්‍යන්තර යථාර්ථයත් සම්බන්ධයෙන් අප ගන්නා ආකල්පවලත් සංකලනයකින් නිර්මාණය වුණු ප්‍රතිපත්තියක් වීම ස්වාභාවිකයි.

කලකට පෙර ශ්‍රී ලංකාවේ විදේශ ප්‍රතිපත්තිය සකස්කරනු ලැබුවේ සුළු කණ්ඩායමක් විසින්. ප්‍රතිපත්ති සම්පාදනයත්, සාකච්ඡාවත් දේශපාලන නායකයින් කීපදෙනෙකුගේත්, බුද්ධිමතුන් කියා හැඳින්වුණු අතලොස්සක් දෙනෙකුගේත්, තවත් ටික දෙනෙකුගේත් ඒකාධිකාරයක්ම වාගේ පැවතුණා. නමුත් දැන් බණ්ඩාරනායක ජාත්‍යන්තර අධ්‍යයන මධ්‍යස්ථානය වාගේ ආයතන නිසාත්, ජනතාවගේ දේශපාලන දැනුම් තේරුම්කම වැඩිවීම නිසාත් විදේශීය ප්‍රතිපත්තිය ගැන උනන්දුව ගොඩක් පුළුල්වෙලා තිබෙනවා. විදේශ කටයුතු ගැන සාකච්ඡාවලට පොදු ජනයා සහභාගිවීම අපි පුළුල් කරන්න ඕනෑ. විදේශ කටයුතු ගැන සංවාදය වරප්‍රසාද ලත් සුළු සංඛ්‍යාවක ග්‍රහණයෙන් මුදාගන්න ඕනෑ. එය ජනතාව පදනම් කරගෙන, ජනතාව තුළින් උද්ගතවන්නක් බවට පත් කරන්න ඕනෑ. එහෙම කළොත් පමණයි, අපට නියම වශයෙන්ම ප්‍රජාතන්ත්‍රවාදී විදේශ ප්‍රතිපත්ති මාර්ගයක් සකස්කරගන්න පුළුවන් වෙන්නේ.

මේ ක්‍රියාදාමයට මූලික වෙන්නේ අධ්‍යාපනය. ඒ නිසයි, බණ්ඩාරනායක මධ්‍යස්ථානය වාගේ ආයතනවලට වැදගත් ජාතික කර්තව්‍යයක් පැවරී තිබෙන්නේ. ඒ නිසයි, නමුත්නාත්සේලාගේ වැඩකටයුතු පුළුල් කරන්න අප ධෛර්ය දිය යුත්තේ. ඒ නිසයි, මේවාගේ ආයතන අපි රටපුරාම පිහිටුවිය යුත්තේ. ජාත්‍යන්තර කටයුතු හැදෑරීම කොළඹට පමණක් සීමා නොකළ යුතුයි. ඒ අවස්ථාව අපේ මුළු මහත් ජනතාවටම ලබාදෙන්න ඕනෑ. අපේ ජනතාව කථාකරන කුමන භාෂාවකින් වුවත් මේ අධ්‍යයන කටයුතු කරන්න ඔවුන්ට අවස්ථාව තිබෙන්න ඕන. උසස් අධ්‍යාපනය සැම දෙනාටම ලබාගන්න පුළුවන් ඉඩකඩ ඇති කිරීම පමණක් මදි. එම අවස්ථාව, හැමෝටම පහසුවෙන්

ලබාගන්න පුළුවන් තත්ත්වයක් ඇති කරන්න ඕන. මේ අධ්‍යාපන අවස්ථා විමධ්‍යගත කරලා, කුඩා නගරයටත්, ගමටත් ලබාදිය යුතුයි. මේ කටයුත්තට අළුතින් ගොඩනැගිලි හදන්න ඕන නැහැ. රටේ නොයෙකුත් ස්ථානවල තිබෙන මධ්‍ය මහා විද්‍යාල ගොඩනැගිලි, පාසල් පංති පවත්වන්නේ නැති කාලය තුළදී මේ කටයුත්තට පාවිච්චි කරන්න පුළුවන්.

අපි විදේශ ප්‍රතිපත්තිය ගැන සාකච්ඡා කරනවිට එක් වැදගත් කාරණයක් මතක තබාගන්න ඕනෑ. මා කලින් කිව්වා වාගේ විදේශ ප්‍රතිපත්තිය දේශීය අවශ්‍යතා පදනම් කරගෙන ගොඩනැගුනක් වීම අවශ්‍යයි. එයින් අපේ ජනතාවගේත් රටේත් අවශ්‍යතා ඉෂ්ඨවෙන්න ඕන. අප රට තුළ දකින්නට නැති, පිළිපැදීමක් නැති හුදු කල්පනා මාත්‍ර ගුණ දහම් අපි ලෝකෙට දේශනා නොකළ යුතුයි. අප මුහුණපා සිටින ප්‍රශ්න විසදාගන්න අපට බැරිනම්, ලෝක ප්‍රශ්න විසදන්නට යැම වැදගැම්මක් නැති මෝඩ වැඩක්. අප ජීවත්වන ලෝකයට වැඩිම සේවයක් කරන්න අපට පුළුවන් වෙන්නේ බැහැර රටවලට ගුණ ධර්ම දේශනා කිරීමෙන් නොවේ. යුක්ති සහගත පදනමකින් අපේම ප්‍රශ්න නිරාකරණය කරගත්තොත් තමයි, අප ලොවට ඉහළම සේවයක් කළා වෙන්නේ. මේ අරමුණ සාක්ෂාත් කරගැනීම සිතේ තබාගෙන, අපේ රටට වැඩිම යහපත සැළසෙන ආකාරයට අපේ විදේශ ප්‍රතිපත්තිය දැන් අපි සකස්කරගෙන යන බව ප්‍රකාශ කරන්න සතුටුයි.

මගේ රජය පුළුල් අරමුණු තුනක් ඉටුකර ගන්න ප්‍රතිඥාදී තිබෙනවා. මෙන්න මේවා තමයි ඒ අරමුණු තුන :—

පළමුවැන්න — සාකච්ඡාවෙන්, අන්මතවලට ගරු කරමින් තීරණ ගැනීමෙන් හා සම්මුතියෙන් යළි සාමය ස්ථාපිත කිරීම.

දෙවැන්න — නීතියේ ආධිපත්‍යය සම්පූර්ණයෙන්ම ඇති කිරීම, සදාචාර සාරධර්ම කෙරෙහි ගෞරවය නැවත ඇති කිරීම හා රජයේ හා වෙනත් පොදු තිළනල දරන සියළුදෙනා විසින් පිළිපැදිය යුතු ආචාරධර්ම පද්ධතියක් පැනවීම මගින් විනය හා සංවරය ඇති කිරීම.

තුන්වැන්න — දේශපාලන, ආර්ථික සමාජ හා පරිපාලන තන්ත්‍රය ප්‍රතිසංවිධානය කිරීම මගින් දිළිඳුබව තුරන් කිරීම.

මේ අරමුණු ඉටුකරගන්න නොකඩවාම වෙර දැරීමට මම පෞද්ගලිකවම ප්‍රතිඥාදී තිබෙනවා. මේ ප්‍රයත්නය සාර්ථක කරගන්නට

විදේශීය සම්බන්ධතා මගින් ඉතාම වැදගත් කාර්යභාරයක් ඉටුවිය යුතුව තිබෙනවා. විදේශ වලින් ලැබෙන ධෛර්යය, ආධාරය, සහයෝගය අපි ඉතා අගේකොට සලකනවා. නමුත් අපේ ස්වෛරීභාවයට හානියක් වන ආකාරයට කිසිම අවස්ථාවක අපට ක්‍රියා කරන්න බැහැ. අපේ නිදහස කාටවත් විකුණන්නත් බැහැ. යම් ජාතියක් කොච්චර දුරින් හිටියත්, කොච්චර කිට්ටුවෙන් හිටියත්, කොපමණ බලසම්පන්න වුණත් වෙනත් ජාතීන් මත බලයක් පවත්වන්නට බලාපොරොත්තු වෙන්න එම ජාතියට අයිතියක් නැහැ. අපි අනුගමනය කළයුතු ප්‍රතිපත්ති නියම කරදෙන්නවත්, අපේ අකමැත්ත නොතකා අපේ රටේ රැඳී සිටින්නවත් එම ජාතියට අයිතියක් නැහැ. ඈත අතීතයේ වුණත් වර්තමානයේ වුණත් ශ්‍රී ලාංකිකයින්ගේ රුධිරය අපේ මාතෘ භූමිය මත හලා තිබෙන්නේ එය කාගටවත් වහල්භාවයේ තබාගන්න ඉඩ දෙන්න නොවෙයි.

මා පළකරන මෙ අදහස ශ්‍රී ලංකාවේ තිබෙන ප්‍රමුඛ දේශපාලන පක්ෂ දෙක විසින් පොදුවේ දරන මතයක්. මේ පක්ෂ දෙක වෙනත් දේ ගැන ප්‍රතිවිරුද්ධ මත දරන බව කවුරුත් දන්නවා. බණ්ඩාරනායක මහත්මිය 1987 දි ෆිලික්ස් ඩයස් දේශනය පවත්වමින් මෙන්න මෙහෙම ප්‍රකාශ කළා :

" ජාත්‍යන්තර මහ බලවතුන් ඉන්දියානු සාගරයෙන් ඉවත්වීම, හුදෙක් යම් කලාපීය බලවතෙකුට සිය අසල්වැසියන් කෙරේ සිය ආධිපත්‍යය පැවැත්වීමට අවකාශ ලැබීමක් වේනම්, ඉන්දියානු සාගර කලාපීය රටවලට එම ඉවත්වීමෙන් ප්‍රයෝජනයක් අත් නොවනු ඇත . . . . . කලාපීය ආධිපත්‍යයක තර්ජනයට අපිදු මුහුණ දී සිටිමු. "

බණ්ඩාරනායක මහත්මිය පළ කරපු මේ හැඟීම් සියළුම දේශප්‍රේමී ශ්‍රී ලාංකිකයින්ට එකඟවන්න පුළුවන් ඒවා. මේ තත්ත්වය නිසා තමයි, අපි ඉන්දියානු සාම සාධක හමුදාව ශ්‍රී ලංකාවෙන් ආපසු කැඳවා ගන්න සලස්වන්න මෙතරම් මහන්සි ගත්තේ. ප්‍රතිපත්තිමය වශයෙන් මේ සම්බන්ධයෙන් අපි දැන් සාර්ථකත්වයක් ලබා තිබෙනවා. ඇත්තවශයෙන්ම මෙ කටයුත්ත නිමවෙනතුරු අපේ මහන්සිය මදක්වත් ලිහිල් කරන්න බැහැ. කලාපීය සහයෝගිතාව, ජාතික සංවර්ධනයට අදාල ප්‍රශ්න වාගේ තවත් නොයෙකුත් වැදගත් දේ තිබුණත්, මේ අවස්ථාවේදී ඒවාට වඩා මූල්තැනක් මේ කාරණයට දියයුතුව තියෙනවා. අපේ අධිෂ්ඨානය ගැන කිසිවෙක් සැකයක් ඇතිකර ගතයුතු නැහැ. රට ඇතුලේ වුණත් පිටත වුණත් ඉදගෙන අපේ ජාතික ස්වෛරීභාවය පළුදු

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

කරන්න කිසියම් කොටසක් කුමන්ත්‍රණ කරනවානම්, එහෙම අය ශ්‍රී ලාංකික ජනතාවගේ ධෛර්යයත්, අධිෂ්ඨානයත් ගැන පරිස්සම්වන එක හොඳයි. අපි බෞද්ධ ප්‍රතිපත්ති මාර්ගය අනුව නිවැරදිව සිතමින් නිවැරදිව ක්‍රියා කළොත් අපට සියළු බාධක අභිබවා ජයගන්න බැරි වෙන්නේ නැහැ.

නොයෙක් අතින් බැලුවාම අපේ ඉතිහාසය අපට මගහෙළිකරන ප්‍රදීපස්ථම්භයක් කියන්න පුළුවන්. අපේ ඉතිහාසය තුළ නොයෙක් අවස්ථාවල අපේ ස්වෛරීභාවයට අභියෝග එල්ල වුණා. දුසිම ගණන් ආක්‍රමණවලට අපි මුහුණ පෑවා. ඇත්තවශයෙන්ම මුළු ලෝක ඉතිහාසයේම අපේ රට ආක්‍රමණවලට වැඩියෙන්ම ගොදුරු වුණු රටවල්වලින් එකක් වෙන්න පුළුවන්. සමහර බලවත්තු දීර්ඝ කාලසීමාවන් තුළ අපි යටත් කරගෙන සිටියා. එහෙම වුණත්, අපේ ජනතාවගේ ධෛර්යයත් අපේ සංස්කෘතියේ හරයත් විනාශ වුණේ නැහැ.

මේ ඛේදවාචකය මැද්දේම අපි ශ්‍රේෂ්ඨ ශිෂ්ටාචාරයක් ගොඩ නැගුවා. පැරණි ශ්‍රී ලංකාවේ කර තිබෙන අතිවිශාල ඉදිකිරීම් ගැනත්, ඉංජිනේරු විද්‍යාත්මක දස්කම් ගැනත් අපි කවුරුත් දන්නවා. අපේ සමාජයීය ජයග්‍රහණත් ඒවාගේම විශාලබව අවබෝධ කරගෙන ඉන්නේ ටික දෙනයි. උදාහරණයක් දක්වනවානම්, 18 වන සියවසේ දී අපේ කන්ද උඩරට රාජධානියෙහි අසාමාන්‍ය පිළිවෙලක ජනවාර්ගික, ආගමික සමගියක් පැවතුණා. සිංහල, ද්‍රවිඩ, මුස්ලිම් ජන කොටස් පමණක් නොවෙයි, යුරෝපීය ජාතිකයිනුත් එකට සමගියෙන් ජීවත් වුණා. බෞද්ධ, හින්දු, ඉස්ලාම්, ක්‍රිස්තියානි කියන සියළුම ආගම ධර්මයන්ට ඉතාම සහනශීලී හැඟීමකින් ගරු කරනු ලැබුවා. සියළුම ජනකොටස්වල පුද්ගලයින් පාලන තන්ත්‍රයේ ඉහළ තනතුරු දැරුවා. බහු ජනවාර්ගික, බහු ආගමික සමගිය ශ්‍රී ලංකාවට අළුත් දෙයක් නොවන බව කන්ද උඩරට ඉතිහාසයෙන් පෙනී යනවා. අපේ ඉතිහාසයේ මේ වටිනා අංග වත්මන් ජීවිතයටත් ඇතුල් කරගන්න අපි මහන්සි ගන්න ඕනෑ.

මේ වාගේ ප්‍රතිපත්ති උඩ අපි ශක්තිමත්ව සිටියොත් අපට ඕනෑම අභියෝගයකට මුහුණ දෙන්න පුළුවන්. අපේ රටේ පුංචිකම, භෞතික ධනය අතින් අපේ දුබලකම බාධකයක් වෙන්නේ නැහැ. එහෙම හිටියොත් අපට විශාල, ශක්තිමත් අයට නොබියව මුහුණ දෙන්න පුළුවන්. මහා ප්‍රාඥයෙක් වන ගුරු දේව රවීන්ද්‍රනාත් තාගෝර් තුමා කිව්වා වාගේ

මා හිතාදර සහෝදරයිනි,
ඔබේ වාත් පැවැත්මේ සුදුවතිත් සැරසිලා
උඩඟු අයත්, බලවන්තයිනුත් ඉදිරියේ නැඟී සිටින්න
ලජ්ජා නොවන්න.

නිහතමානී බවේ කිරුළ හිස දරන්න,
ඔබේ නිදහස, ඔබේ ආත්මයේ නිදහස කරගන්න.
විශාලකම, ශ්‍රේෂ්ඨකම නොවෙයි ;
උඩඟුකම සදාකාලික ද නොවෙයි . . . . .

අනාගතයේදී අපේ පැවැත්ම සහතික කරගන්න පුළුවන් වෙන්නේ මෙන්න මේ හැඟීමෙන් ඔදවත් වුණොත් පමණයි.

අපේ අනාගතය සුරක්ෂිතවීම හුඟක් දුරට රඳාපවතින්නේ අපේ විදේශ ප්‍රතිපත්තිය සකස්කර ගන්නා ආකාරය මත බව කියන්න පුළුවන්. මගේ රජය සැම දෙනා සමගම මිත්‍රත්වයෙන් සිටින්න බලාපොරොත්තු වෙනවා. කා සමගවත් අපේ ද්වේශයක්, තරහක් නැහැ. එක්සත් ජාතීන්ගේ සංවිධානය ගැනත්, නොබැඳි ව්‍යාපාරය ගැනත් අපි විශ්වාසය තබනවා. මේ සංවිධානවල අඩුපාඩුකම් තිබෙන්න පුළුවන්. ඒවා හරිගස්සා ගන්න අපි මහන්සි ගන්න ඕනැ. අපි කිසිම කඳවුරකට වැඩි ඇල්මක් දක්වන්නේ නැහැ.

මේ ආයතනයෙන් උපාධිය ලබන සැම කෙනෙක්ම ජාත්‍යන්තර සබඳතා ගැන එක් මූලික සත්‍යයක් ඉගෙන ගන්නවා කියැකයි. බලය සැම විටම ස්ථාවරව පවතින්නේ නැත — කියන එක තමයි, එම සත්‍යය. වරින්වර බලවත් ජාතීන් නැඟී සිටිනවා ; නැවතත් පරිහානියට යනවා. මේක අනිවාර්යෙන්ම සිදුවෙන දෙයක්. අද ලෝකය දෙස බැලූවාම, මෙය හොඳටම පෙනෙන්ට තිබෙනවා. ජාතියක් බලයෙන් පිරිහෙනකොට වඩාත් වැදගත් වන්නේ බලය නොවෙයි. ඒ අවස්ථාවේදී ඒ ජාතියට වැදගත් වන්නේ අනික් ජාතීන්ගෙන් තමන්වෙන පළවෙන සුහදකම, හොඳ හිත. ශ්‍රී ලාංකිකයින් වන අපි වැඩි වැඩියෙන් එකතු කරගන්න ඕන, අගය කරන්න ඕන මෙන්න මේ සුහදකම, හොඳ හිත කියන වස්තුවයි.

මේ කටයුත්ත ලේසිපහසු වැඩක් නොවෙයි. අපේ සමාජයේ වෛරය, ද්වේශය හුඟක් පැතුරුණු යුගයක් දැන් අපි පසුකරලා ඉන්නවා. යම් චෙතස්කමක් බලයෙන් ඇති කිරීමම ප්‍රමාණවත් වන්නේ නැහැ. යම්

පරිවර්තනයක් උගුලා සිටින්නේ හදවතේ වෙනසක් උඩ පිහිටියොත් පමණයි. හදවතේ වෙනසකට හුඟක්ම හේතු වන්නේ නිවැරදි අවබෝධය. නිවැරදි අවබෝධය ලැබෙන්නේ නිවැරදි ඉගෙනුමෙන්. අධ්‍යාපනයෙන්.

මේ නිසයි, අද තමුන්නාන්සේලා සමග එක්වන්නට ලැබීම මට විශේෂ සතුටක් වෙන්නේ. බණ්ඩාරනායක ජාත්‍යන්තර අධ්‍යයන මධ්‍යස්ථානයෙන් ඉටු වියයුතු කාර්යයක් තමයි, ඒ නමින් ඒ ආයතනය පිහිටුවලා උපහාර දක්වුණු උසස් රාජ්‍ය පාලකයාගේ ජාත්‍යන්තර දර්ශනයේ අරමුණු ඉටු කරන්න ක්‍රියා කිරීම. දිවංගත ගරු එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමා අපේක්ෂා කළේ සාමයෙන් එක්වුණු ලෝකයක් — වෛරයෙන් කැබැලිවලට කැඩුණු ලෝකයක් නොවෙයි.

මේ අවස්ථාවේදී දිවංගත ගරු එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමා ගැන මගේ පෞද්ගලික මතක සටහනක් ඉදිරිපත් කරන්න මම තමුන්නාන්සේලාගේ අවසරය පතනවා. මම බණ්ඩාරනායක මැතිතුමා දැනහැඳිනගෙන හිටියේ පාසල් යන අවධියේ සිටම. ඇත්තවශයෙන්ම කියනවානම්, මම එතුමා හඳුනා ගත්තේ බණ්ඩාරනායක මහත්මිය එතුමා හමුවන්නත් බොහොම කලකට ඉස්සරවෙලා. මට තවම මතකයි, කොළඹ සිල්වර් ස්මිත් වීදියේ පිහිටා තිබුණු " උඩුගහ වලව්ව " කියන එතුමාගේ කොළඹ නිවසට මම පළමුවෙන් ගිය දවස. ඒ නිවස පිහිටි ඒ වීදිය දැන් හඳුන්වන්නේ බණ්ඩාරනායක මාවත කියලා.

සාන්ත ජෝශප් විද්‍යාලයේ සිංහල සාහිත්‍ය සංගමයේ ලේකම් හැටියට මම එදා එතුමාගෙන් ඉල්ලා සිටියා අපට දේශනයක් පවත්වන්න කියා. මම එතුමාට දැනුම් දුන්නා ''මහා ලොවකට පුංචි ලංකාව දිය යුත්තේ කුමක්ද'' (What Contribution can tiny Lanka make to the Mighty World) කියන මාතෘකාව යටතේ කථාකළොත් හොඳයි කියා.

ඒ දේශනයෙන් බණ්ඩාරනායක මැතිතුමා පළකළ අදහස් තවමත් මගේ සිතේ දෝංකාර දෙනවා. කෙටියෙන් දක්වනවානම් මෙන්න මේ අදහස් තමයි. එතුමා පළ කළේ :

" යම් රටක් විශාල යයි සැලකිය යුත්තේ ඒ රටේ භූමි ප්‍රමාණයවත් ජනගහණයවත් සැලකිල්ලට අරගෙන නොවෙයි. යම් රටකින් ලොවට ලැබෙන සදාචාර සාරධර්ම අනුව තමයි, ඒ රටේ වැදගත්කම තීරණය වෙන්නේ. ලෝකය සැමවිටම ලොකු අභියෝග වලට මුහුණ දෙනවා. පුංචි ලංකාවට පුළුවන්නම් තමන් පිළිපදින සදාචාර ධර්ම

ලොවට ඉදිරිපත් කරන්න. ඒ අභියෝග ජයගන්න අවශ්‍ය සදාචාරාත්මක ශක්තිය ලොවට දෙන්නත් ලංකාවට පුළුවන් වෙනවා. මෙම කටයුත්ත ඉෂ්ඨකරන තරමට ලංකාව විශාල වෙනවා. ලෝකය කුඩා වෙනවා."

බණ්ඩාරනායක මැතිතුමා පළ කළ මෙ අනුස්මරණීය අදහස් වලින් එතුමාගේ තවත් චරිත ලක්ෂණයක් පැහැදිලි වෙනවා. මගේ අදහසේ හැටියට එතුමා, වෙනස්වන තත්ත්වයන් අනුව හැඩගැසෙන්න පුළුවන් විදියට තමන්ගේ අදහස් නිරන්තරයෙන්ම සකස්කරගත්තා, සංවර්ධනය කරගත්තා. බුද්ධිමය වශයෙන් පහසුවෙන් හැඩ ගැහෙන මේ ස්වභාවයත්, ප්‍රතිපත්තියෙහි යුබතම්‍ය ගතියත් අප හැමදෙනාම පාඩමට ගතයුතු දෙයක්.

පුද්ගලයින්ට අධ්‍යාපනය දීමෙන් අපි ඔවුන් ඥනවන්න බවට පත් කරනවා. ඥනවන්තයා සැම විටම සාමය පතනවා. සාමය ලබාගන්න වැඩ කරනවා. තමුන්නාන්සේලා මේ කටයුතු ඉටුකරගෙනයන අතරතුර සිහි තබාගතයුතු දෙයක් තිබෙනවා. එය තමයි, තමන්ගේ ආයතනයේ වැඩකටයුතුවල තත්ත්වය – ගුණාත්මක අගය – හැකි තරම් උසස් කිරීම. තමුන්නාන්සේලාගේ ආයතනය සැම විටම අගතියෙන් තොරව විෂය මූලකව කල්පනා කරන, දේශපාලන බැඳීමවලින් තොර, තත්ත්වයේ පවතින්න ඕනැ. දිවංගත ගරු එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මැතිතුමාගේ උසස් අරමුණු කරා යන්න පුළුවන් වෙන්නේ එසේ පැවතියොත් පමණයි.

මේ අරමුණ ඉටු කරගන්න, මෙන්න මේ කර්තව්‍යයන් සතර ඉටු කරන්න වැයම් කරන්න කියා, මම තමුන්නාන්සේලාගෙන් ඉල්ලා සිටිනවා :

**පළමුවැන්න –** තමුන්නාන්සේලාගේ පාලක මණ්ඩලය උසස් මට්ටමකට පත් කිරීමටත් එහි නියෝජනය පුළුල් කිරීමටත් නොකඩවාම ක්‍රියා කිරීම.

**දෙවැන්න –** පර්යේෂණ කටයුතු වැඩි කිරීමෙන් තමුන්නාන්සේලාගේ ආයතනයෙන් ලැබෙන්නට සලස්වන අධ්‍යාපනය වඩාත් සම්පූර්ණ කිරීම.

**තුන්වැන්න –** තමුන්නාන්සේලාගේ වැඩසටහන් කොළඹින් පිටතට ව්‍යාප්ත කිරීම සලකා බැලීම.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

**සතරවැන්න** – අධ්‍යයන කටයුතු සඳහා බඳවාගන්නා සංඛ්‍යාව වැඩි කිරීම හා වරප්‍රසාද අඩු ශිෂ්‍යයින්ගේ අවශ්‍යතා සම්පූර්ණ කිරීමට පියවර ගැනීම.

තමුන්නාන්සේලාගේ පාලක මණ්ඩලයට මේ සඳහා අවශ්‍ය වැඩසටහන් සකසා ගන්න පුළුවන් බව මට විශ්වාසයි. වර්තමාන පාලක මණ්ඩලය දුෂ්කර කාලසීමාවන් තුළ මේ ආයතනය නිසිමඟ ගෙනයමින් පාලනය කර තිබෙනවා. අනාගතයේදී තවත් යහපත් වැඩකටයුතු රාශියක් ඉටු කිරීම අපි තමුන්නාන්සේලාගෙන් බලාපොරොත්තු වෙනවා.

බණ්ඩාරනායක ජාත්‍යන්තර අධ්‍යයන මධ්‍යස්ථානයේ අධ්‍යක්ෂ රේ පෝබ්ස් මහතාටත් මගේ ප්‍රශංසාව පළ කරන්න සතුටුයි. මේ මධ්‍යස්ථානයේ තත්ත්වය උසස් කරන්න එතුමා ඉතා වැදගත් සේවයක් ඉටුකර තිබෙනවා. ආයතනයේ අව්‍යාජත්වයත්, එයින් සැපයෙන ශාස්ත්‍රඥානයේ තත්ත්වයත් එතුමාගේ පාලනය යටතේ වැඩිදියුණු වෙලා තිබෙනවා. අද මේ ආයතනයෙන් උපාධි ලබා සිටින ස්ත්‍රී පුරුෂයින්ගේ ස්වභාවයෙන් එය මනාව පැහැදිලි වෙනවා. ඔවුන් සියළුදෙනාටම මගේ හෘදයාංගම සුබපැතුම පිරි නමනවා.

ස්තූතියි !

# பண்டாரநாயக்கா சருவதேச ஆய்வு நிலையப் பட்டமளிப்பு விழாவில் அதிமேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை 1989 செத்தெம்பர் 22 ஆந் திகதி — பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபம்

இந்த வைபவத்தில் தலைமை தாங்குவதற்கு என்னை அழைத்த உங்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். பண்டார நாயக்கா சருவதேச ஆய்வு நிலையத்தின் எட்டாவது பட்டமளிப்பு விழா இதுவாகும். இவ் வைபவங்கள் சருவதேச உறவுகளை ஆய்வதற்கு நீங்கள் எடுக்கும் அக்கறை எவ்வளவு என்பதை எங்களுக்கு ஞாபகப்படுத்துவன வாகும். உங்கள் 13 வருட வரலாற்றில் நீங்கள் இடையருது செய்துள்ள சேவையினை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இந்தச் சாதனைக்கு ஒப்பான சாதனைகளைப் புரிந்துள்ள உயர்கல்வி நிறுவனங்கள் மிகச் சிலவே நமது நாட்டில் உள்ளன.

சருவதேச உறவுகள் பற்றிய ஆய்வானது அண்மைக்காலம் வரை, இலங்கையில் தனிப்பட்ட கல்வித்துறையாக வேறுபடுத்திப் பயிலும் வழக்கம் இருந்ததில்லை. மிக நவீன அணுகு முறையினைப் பின்பற்று வதில் உங்கள் நிலையம் முன்னோடியாகத் திகழுகின்றது என்பதை நானறிவேன். சருவதேச உறவுகள் பற்றிய கல்வி, தனிப்பட்ட ஆய்வுத்துறையாகவும், சிறப்புமிக்க பயில்துறையாகவும் நமது உயர் கல்வி நிலையங்களில் இப்பொழுது இதழ்விட்டு மலர்ந்து வருகின்றது.

நவீன உலகத்தில் சருவதேசப் பண்பு மேலோங்கி நிற்கும் அமிசமாக இருந்து வருகின்றது. எந்த நாட்டினமும், எந்த அரசும் தன்னந்தனியாக நிலைத்திருக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. பரஸ்பர உறவுகளைக் கொண்டுள்ள இன்றைய உலகத்து நாடுகள் தன்போக்கிலேயே வேலை செய்ய முற்பட்டால் அந்நாடுகள் வளர்ச்சியடையாதனவாகவும், ஒதுக்கப்

பட்டவைகளாகவும் இருக்கும். இந்த உலகச் சூழலிலே வெளிநாட்டுக் கொள்கை இன்று மிக முக்கிய இடம் வகிக்கின்றது. உலக விவகாரங் களைப் பற்றி அறியாத அல்லது ஊகித்தறிய முற்படாத வெளிநாட்டுக் கொள்கை காரணமாக ஒரு நாட்டின் புகழ் உருவத்துக்குச் சேதம் ஏற்படலாம். அறிவு ஒளி வீசும் வெளிநாட்டுக் கொள்கை என்பது யாது ? அது உண்மையில் ஒரு நாட்டின் தவிர்க்க முடியாத தேவைகளையும் சருவதேச உண்மைகளையும் ஒன்று சேர்க்கும் கொள்கையாகத்தான் அமைதல் வேண்டும்.

கடந்த காலத்தில், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, ஒரு சிறிய குழுவினரால் ஆக்கப்பெற்று வந்தது. அரசியல் முதல்வர்கள் சிலரும், அறிவாளிகள் எனக் கூறிக்கொள்பவர் சிலரும், ஏனையோர் மிகச் சிலரும் கொள்கைகளின் ஆக்கத்திலும், ஆய்வுகளிலும் ஏகபோக உரிமை கொண்டவர்களாக விளங்கினர்கள். இப்பொழுது பண்டாரநாயக்கா சருவதேச ஆய்வு நிலையத்தைப் போன்ற நிறுவனங்கள் காரணமாகவும், நமது மக்களது வளர்ந்துவரும் அரசியல் அறிவு காரணமாகவும் வெளிநாட்டுக் கொள்கைகள் சம்பந்தமாகப் பலர் அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வாருயினும் இந்த வாய்ப்புப் போதாது. வெளிநாட்டு விவகாரங்களை ஆய்வதில் பொதுமக்கள் யாவரும் பங்குபற்றக்கூடிய நிலையினை ஏற்படுத்துதல் வேண்டும். சிறப்புரிமைகளைக் கொண்டவர் களது செல்வாக்கிலிருந்து வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதங்கள் விடுவிக்கப்படல் வேண்டும். பொது மக்கள் பங்குபற்றக்கூடிய நிலைக்கு நாங்கள் அதனைக் கொண்டு வருதல் வேண்டும். அத்தகைய நடவடிக்கை களின் மூலம் மட்டுமே உண்மையாகவும், சனநாயக முறையிலும் வெளிநாட்டுக் கொள்கையொன்றை நாம் அணுக முடியும்.

இச் செயல்முறைக்கு கல்வியே வழிவகுக்கும். எனவே தான் பண்டாரநாயக்கா நிலையத்தைப் போன்ற நிறுவனங்கள் நாட்டுக்குப் பெரும் சேவையாற்றக்கூடிய நிலையில் இருக்கின்றன. எனவே தான் நாங்கள் உங்கள் சேவையினை விரிவாக்குவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்ருேம். எனவே தான் இந்த நிறுவனத்தைப் போன்ற வேறுபல நிறுவனங்களை இந்நாட்டில் அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்ருேம். சருவதேச ஆய்வுகள் கொழும்புக்கு மாத்திரம் கட்டுப்படுத்தப்படத் தேவையில்லை. அவற்றைக் கொண்டு நம் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பயன்பெறக் கூடிய நிலை ஏற்படல் வேண்டும். அந்த ஆய்வுகள் நாட்டு மக்கள் பேசும் மொழிகள்

அனைத்திலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். உயர்கல்வியினைப் பெறும் வசதியானது எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை அனைவரும் எளிதில் பெறக்கூடிய வசதிகளையும் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய கல்வி வாய்ப்புகள் பட்டினங்கள் வரையும், கிராமங்கள் வரையும் பன்முகப்படுத்தப்படல் வேண்டும். இதனைச் செய்வதற்கு புதிய கட்டிடங்கள் அமைக்கத் தேவையில்லை. பிள்ளைகள் படிக்காத நேரங்களில் நாட்டின் பல பாகங்களிலுள்ள மத்திய மகா வித்தியாலயங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களை இதற்காகப் பயன் படுத்தலாம்.

வெளிநாட்டுக் கொள்கை பற்றி நாம் ஆராயும்போது நாம் மறக்க முடியாத கட்டாயத் தேவையொன்று இருக்கின்றது. நான் முன்னர் குறிப்பிட்டவாறு வெளிநாட்டுக் கொள்கையானது உள்நாட்டு விவகாரங்களோடும் தேவைப்பாடுகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். அது நமது மக்களதும் நம் நாட்டினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் அமைதல் வேண்டும். நமது நாட்டில் ஒழுக்க சீலங்கள் இல்லாத போது நாம் உலக நாடுகளுக்கு உபதேசம் செய்யக் கூடாது. நமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலை இருக்கும்போது நாம் உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயலுவது பயனற்ற செயலாகவும், அறிவற்ற செயலாகவும் அமையும். வெளிநாடுகளில் ஒழுக்க சீலங்கள் பற்றி உபதேசம் செய்வதானது நாம் உலக விவகாரங்களுக்குச் செய்யக்கூடிய மிகச் சிறந்த பங்களிப்பாக அமையாது. நமது நாட்டை ஒழுங்கானதும் நீதியானதுமான நிலைக்கு கொண்டுவருதலே நாம் உலகத்திற்குச் செய்யக்கூடிய மாபெரும் பணியாகும் . இந் நோக்கத்தை எய்தும் பொருட்டு இப்பொழுது நமது வெளிநாட்டுக் கொள்கையானது நம் நாட்டுக்கு மிகச் சிறந்த பயன்களைத் தரும் வகையில் திசை திருப்பப்பட்டு வருகின்றது என்பதை நான் கூறவிரும்புகின்றேன்.

எனது அரசாங்கம் மிக முக்கியமான மூன்று நோக்கங்களை எய்துவதற்கு உறுதியளித்துள்ளது. அவையாவன :

முதலாவதாக —பேச்சுவார்த்தைகளின் மூலமும், யாவரினதும் கருத்து அபிப்பிராயங்களை மதிப்பதன் மூலமும் பொதுவான இணக்கங்களுக்கு வருவதன் மூலமும், வெறுப்பு மனப்பான்மையைப் போக்கி மீண்டும் சமரச நிலைக்கு வருவதன் மூலமும் சமாதானத்தை ஏற்படுத்துதல் ;

இரண்டாவதாக —சட்டவாட்சியை வலியுறுத்தி சமுதாயத்தில் ஒழுங்கினைப் பேணுதல், பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டவர்களுக்கான ஆசாரக் கோவையொன்றை நடைமுறைக்குக் கொண்டுவருதல் ;

மூன்றாவதாக —அரசியல், பொருளாதார, சமூக, நிருவாகச் செயல்முறையினை முற்றுமுழுதாக மாற்றுவதன் மூலம் வறுமையினைப் பூண்டோடு ஒழித்தல்.

இந்நோக்கங்களை எய்துவதற்கு இடையருமல் முயற்சி செய்வதற்கு நான் தனிப்பட்ட முறையில் உறுதியளித்துள்ளேன். அந்த முயற்சியில் வெளிநாட்டு உறவுகள் மிக முக்கிய பங்கினை வகிப்பனவாகும். நாங்கள் வெளிநாடுகளிலிருந்து ஊக்குதல்களையும் உதவிகளையும், ஆதரவுகளையும் பெறுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். ஆயினும் நாங்கள் எமது இறைமைக்குத் தீங்கு ஏற்படும் வகையில் அல்லது நமது சுதந்திரத்தை எவருக்கும் பறிகொடுக்கும் வகையில் என்றுமே செயல்பட மாட்டோம். ஒரு நாடு மற்றைய நாடுகளுடன் கொண்டுள்ள தொலைவு காரணமாகவோ, அண்மை காரணமாகவோ, வல்லமை காரணமாகவோ அந் நாடு ஏனைய நாடுகளை கட்டுப்படுத்துவதற்கு உரிமையில்லை. நமது கொள்கைகள் என்னவென்று நமக்கு அதிகார பூர்வமாக ஆணையிடுவதற்கு அல்லது அழையாவிருந்தினராக நம் நாட்டு மண்ணில் தங்கியிருப்பதற்கு அந் நாட்டுக்கு உரிமையில்லை. இன்று வாழுகின்ற இலங்கையர்களினதும் நமது மூதாதையர்களினதும் இரத்தம் நம் நாட்டை அடிமை நாடாக்குவதற்காக சிந்தப்படவில்லை.

இது இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை இருபக்க நாட்டமுள்ள அபிப்பிராயமாகும். 1987 ஆம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் பீலிக்ஸ் டயஸ் சொற்பொழிவினை ஆற்றியபோது பின்வருமாறு கூறியுள்ளார் :

> "அயலண்டையிலுள்ள நாடுகள் இந்து சமுத்திர வலைய அரசுகளுக்கு எதிராக மேலாட்சி செய்வதற்கு வழி பிறக்குமாயின், உலக வல்லரசுகள் இந்து சமுத்திரத்திலிருந்து வாபஸ் பெறுவது, இந்து சமுத்திர வலைய நாடுகளுக்கு ஒரு பயனையும் தரப்போவதில்லை. (அவர் மேலும் கூறினர்) நாங்களே பிராந்திய மேலாட்சியின் அபாயங்களை இப்பொழுது எதிர்நோக்கியுள்ளோம். "

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

மேற்போந்த கருத்துக்கள் நாட்டுப்பற்றுள்ள இலங்கையர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை. இதனால் தான் இந்திய அமைதிகாக்கும் படைகள் இலங்கையிலிருந்து தம்மை வாபஸ் பெற்றுக்கொண்டு செல்ல வேண்டுமென்பதை ஆணித்தரமாகக் கூறிவருகின்றோம். கோட்பாட்டளவில் நாம் வெற்றியடைந்துள்ளோம் என்பது உண்மையாகும். ஆனால் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் வரை நமது முயற்சியைத் தளரவிட மாட்டோம். இம் முயற்சியில் பிராந்தியக் கூட்டுறவு, தேசிய அபிவிருத்திப் பணிகள் முதலியவற்றையும் புறக்கணிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எவரும் சந்தேகிக்க முடியாதவாறு அஞ்சாநெஞ்சம் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நமது இறைமையினைப் பறிகொடுக்கச் சூழ்ச்சி செய்பவர்கள் இலங்கை மக்களின் வீராவேசத்தைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டுமென எச்சரிக்கை செய்கின்றேன். புத்தபகவான் அருளிய நற்சிந்தனையினையும், நற்செயலினையும் பின்பற்றுவோமாயின் நாம் வெற்றிவாகைசூடுவது திண்ணம்.

நமது முற்காலம் பல வழிகளில் நமது வருங்காலத்தைத் தெளிவுறக் காட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. நமது இறைமைக்கே தீங்கிழைத்த சவால்கள் பலவற்றை நாம் எதிர்நோக்கிய காலம் இருந்தது. ஆக்கிரமிப்புகள் பலவற்றை நாம் எதிர்நோக்கிய காலமும் இருந்தது. உண்மையில் உலக வரலாற்றை உற்றுநோக்குமிடத்து பெருத்த ஆக்கிரமிப்புகளுக்கு உட்பட்ட நாடுகளில் ஒன்றாக நம்நாடு உண்டெனவும் கூறலாம். அந்நியப் படைகளின் நீண்டகால ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிய நிலை நமக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும் நமது மக்களின் மனத்துணிவும், நமது பண்பாட்டின் அழியாத் தன்மையும் இன்றளவும் சுடர்விட்டுக் கொண்டே இருக்கின்றன.

இந்த நெருக்கடிகள் எல்லாவற்றுக்கும் மத்தியில் நாம் பெரியதோர் நாகரீகத்தின் வாரிசுகளாகத் திகழ்ந்து வருகின்றோம். பண்டைக்கால இலங்கையர்களால் கட்டி எழுப்பப்பட்ட மாடமாளிகைகள் பற்றியும் பொறியியற் சாதனைகள் பற்றியும் நம் அனைவருக்கும் தெரியும். அவர்கள் அடைந்திருந்த சமூக அபிவிருத்தி ஒப்பற்றதாகும். எடுத்துக் காட்டாக, 18 ஆம் நூற்றாண்டில் கண்டிய அரசின் கீழ், சீரிய இன ஒற்றுமையுடன் சமயங்களுக்கிடையிலான சமரசமும் நிலவியது. சிங்களவர்களும்

தமிழர்களும் முஸ்லிம்களும் ஐரோப்பியர்களும் சமாதானமாக வாழ்ந்துள்ளனர். பௌத்த மதம்,இந்து சமயம், இஸ்லாம் மதம், கிறித்தவமதம் ஆகியவற்றைப் பரஸ்பரம் ஏற்றுக்கொண்டு மதித்து வந்தார்கள். எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களும் உயர் நிருவாகப் பதவிகளை வகித்துமுள்ளனர். கண்டிக் கால வரலாற்றை உற்றுநோக்குமிடத்து பல இனங்களுக்கிடையிலான உறவும், பல மதங்களுக்கிடையிலான சமரசமும் இலங்கைக்குப் புதியனவல்லவென்பது நிரூபணமாகிவிடும். நமது முற்கால நற்பண்புகளை மீண்டும் பேணிக் காப்பதற்கு நாம் முயல வேண்டும்.

அப் பழம்பெரும் சக்திகுன்றுநிலையில் நாம் இருப்போமாயின் எந்தச் சவாலையும் சமாளிக்கக்கூடியவர்கள் ஆவோம். அளவிற் சிறியதாக இருப்பதும், செல்வச் செழிப்பில்லாமல் இருப்பதும் நம்மைப் பாதிக்கமாட்டாது. அளவிற் பெரியோரையும் வலிமைமிக்கோரையும் அச்சமின்றி வெல்லக்கூடிய ஆற்றல் நமக்கு ஏற்படும். வரகவி ரவீந்திரநாத் தாகூர் இக் கருத்தினைப் பின்வருமாறு அழகுறக் கூறியுள்ளார்கள் :

" எனதருமை சகோதரர்களே,
செல்வாக்கும் செருக்கும் மிக்கோரின் முன்னல் பின்வாங்காதிருப்பீர்கள்,
நீங்கள் எளிமை எனும் வெள்ளாடை அணிந்துள்ளீர்கள்,
பணிவென்னும் மணிமுடியும் அணிந்துள்ளீர்கள்,
பெறலரும் ஆன்ம விடுதலையைப் பெற்றுள்ளீர்கள்,
பெரியனவற்றில் பெருமையும் இல்லை
செருக்கு என்றும் நிலைத்திருப்பதும் இல்லை "

நமது வருங்கால வாழ்வை வளமாக்குவதற்கு இச்சீரிய எண்ணங்கள் மட்டுமே உறுதுணை புரிவனவாகும்.

நமது வருங்காலம் பெரும்பாலும் நமது வெளிநாட்டுக் கொள்கையில் தான் தங்கியிருக்கின்றது. எனது அரசாங்கம் அனைவரோடும் நட்புறவுகளைப் பேணவே விரும்புகின்றது. நாங்கள் யாருக்கும் எதிரிகள் அல்லோம். நாங்கள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மீதும், அணிசேரா இயக்கத்தின் மீதும் அபார நம்பிக்கை வைத்துள்ளோம். இந்த

நிறுவனங்களில் குறைபாடுகள் இருக்கலாம். இவற்றைச் சரிசெய்து கொள்ள நாம் ஆவன செய்தல் வேண்டும். உலக நாடுகளுடன் பாரபட்சம் இல்லாமல் நடந்து கொள்ளுதல் நமது கொள்கையாகும்.

இந் நிறுவனத்தில் படித்துப் பட்டம் பெறுபவர்கள் அனைவருக்கும் சருவதேச உறவுகள் பற்றிய ஓர் அடிப்படையான உண்மை தெரியும். அஃதாவது ஆட்சித்திறல் மாருதிருப்பதில்லையென்பதாகும். வல்லரசுகள் தோன்றி மறைகின்றன. இது இயற்கை விதியாகும். இதன் உண்மையினை நாம் இன்றைய உலகில் காணக்கூடியவர்களாக இருக்கின்றோம். வல்லரசுகள் மறையும்போது அவை பெற்றிருந்த அதிகாரத்தை விட அந்நாட்டின் நல்லெண்ணமே பாதிப்புக்குள்ளாகி விடுகின்றது. ஆதலால் இலங்கையின்மீது மற்ற நாடுகள் கொண்டுள்ள நல்லெண்ணத்தைப் பேணிக் காப்பதற்கு நாம் முயலல் வேண்டும்.

இதனைச் சாதிப்பது எளிதான காரியமன்று. நமது சமூகத்தில் பகையும் வெறுப்பும் குடிகொண்ட காலப்பகுதியொன்றைக் கடந்தவர்கள் நாங்கள். மாற்றத்தை வலுக்கட்டாயமாகக் கொண்டு வருவது போதாது. சிந்தனையை மாற்றுவதன் மூலமாகவே நீடுநிலைக்கும் மாற்றம் ஏற்படுகின்றது. சிந்தனை மாற்றத்துக்காகத் தவறில்லாத அறிவுப் புலமை இன்றியமையாதது. அத்தகைய நுண்மாண்நுழைபுலம் சீரான படிப்பு மூலமாகவும் கசடறக் கற்ற கல்வி மூலமாகவும் வாய்க்கும்.

இதனுல்தான் நான் இன்று இச் சிறப்புமிக்க விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். பண்டாரநாயக்கா சருவதேச ஆய்வு நிலையமானது அதற்குத் தம் அரிய பெயரை வழங்கிவிட்டு மறைந்த மாபெரும் அரசியல்வாதியின் சருவதேச நோக்கினை நிறைவு செய்வதற்கு ஆவன செய்தல் வேண்டும். மாண்புமிக்க எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் உலக சங்காரத்துக்கன்றி, உலக சமாதானத்துக்கே பாடுபட்டவர் ஆவார்.

இத் தருணத்தில் எனது சொந்த விடயமொன்றை இங்கு குறிப்பிடுவதற்கு இடமளிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் பள்ளி மாணவனுக இருந்த காலத்திலிருந்தே மறைந்த மாண்புமிகு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா எனக்கு அறிமுகமானவர். உண்மையில் திருமதி பண்டாரநாயக்கா அன்னுரைச் சந்திப்பதற்கு முன்னரே நான் அன்னுரைச் சந்தித்திருந்தேன்.

புதுக்கடை, தட்டாரத் தெரு — இன்று பண்டாரநாயக்கா மாவத்தையில் உள்ள " உடுகஹவளவு " எனப் பெயரிய அன்னாரின் கொழும்பு இல்லத்தில், நான் அன்னாரைச் சந்தித்த நாள் இன்று எனது மனதில் பசுமையாக இருக்கின்றது.

புனித ஜோசப் கல்லூரியின் சிங்கள இலக்கிய சங்கத்தின் செயலாளர் என்ற முறையில், நான் அன்னாரிடம் எங்கள் சங்கத்தில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தும்படி கேட்டுக் கொண்டேன். " சிறிய இலங்கை பெரிய உலகத்துக்கு ஆற்ற வேண்டிய பணி யாது ? "

என்னும் தலைப்பின் கீழ் பேச முடியுமாயின் நன்று என நான் அன்னாரிடம் கூறினேன்.

அன்னார் அன்று ஆற்றிய உரை இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அச் சொற்பொழிவின் பொழிப்புப் பின்வருமாறு :

நிலப்பரப்பைக் கொண்டோ, மக்கட் தொகையினைக் கொண்டோ ஒரு நாட்டின் பெருமை சிறுமைகளைக் கணித்திட முடியாது. ஒரு நாட்டின் ஒழுக்க விழுமியங்களே அதனைச் சிறப்பிக்கின்றன. உலகம் எப்பொழுதுமே சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சிறிய நாடான இலங்கை தமது விழுமியங்களைப் பேணிக் காப்பதாயின் இச் சவால்களைச் சமாளிக்கும் ஆன்மீகச் சக்தியினை உலகத்தாருக்கு வழங்கலாம். இப் பெரும் பணி வளரவளர இலங்கையின் பெருமையும் வளரும். உலகமும் எம்மைப் போற்றும்.

இச் சீரிய கருத்துக்கள் திரு. பண்டாரநாயக்காவின் மேலுமோர் குணவியல்பினைக் காட்டுவனவாகும். அன்னார் மாறும் நிலைகளுக்கேற்ப தமது எண்ணக் கருத்துக்களையும் சீர்செய்து கொள்வதில் எப்பொழுதும் நாட்டமுடையவராகத் திகழ்ந்தார். சூழலுக்கேற்றவாறு அறிவுப் புலமையினை மாற்றியமைத்துக் கொள்ளும்பான்மையும், கொள்கைகளைப் பொறுத்தவரை நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும் கொண்ட அன்னாரின் செயல்கள் எங்களுக்கு நல்ல படிப்பினைகளாகும்.

நாம் புகட்டும் கல்வி காரணமாக அறிவாளிகள் தோன்றுவார்கள். அறிவறிந்த மக்கள் சமாதானத்தை நாடுவார்கள். அவர்கள் சமாதானத்துக்காகவே பாடுபடுவர். உங்கள் நிறுவனம் மேற்கொண்டுள்ள இக் கல்விப் பணி மேலும் சிறக்கும் வகையில் செயலாற்றும்படி நான் வேண்டிக் கொள்கின்றேன். உங்கள் நிறுவனத்தின் நோக்கு புறவயமான

ප්‍රධානපති කාර්යාලය
පුස්තකාලය

தாகவும், அரசியல் சார்பற்றதாகவும் இருத்தல் வேண்டும். நீங்கள் இந்த வழியைப் பின்பற்றுவீர்களாயின் மறைந்த மாண்புமிகு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பேணிக்காத்த உயர்ந்த குறிக்கோள்களை எளிதில் அடையலாம்.

அதனைச் சாதிப்பதற்கு நான் நான்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அவையாவன :

* முதலாவதாக : உங்கள் நிருவாக சபைக்கு எப்பொழுதும் உயர்ந்தோர்களை நியமனஞ் செய்து அதனைப் பரவலாக்குங்கள் ;

* இரண்டாவதாக : மேலதிக ஆராய்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்து உங்கள் கல்விப் பணியைச் சிறக்கச் செய்யுங்கள் ;

* மூன்றாவதாக : கொழும்பிலிருந்து வெளியிடங்களுக்கு உங்கள் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு செல்லல் பற்றி ஆலோசனை செய்யுங்கள் ;

* நான்காவதாக : அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள ஆவன செய்து சிறப்புரிமைகளற்ற மாணவர் களின் தேவைகளையும் பூர்த்தி செய்யுங்கள்.

இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை தீட்டும் வல்லமை நிருவாக சபைக்கு உண்டென்பது எனது நம்பிக்கையாகும். அவர்கள் இடர் பல மிகுந்த காலங்களிலும் இந் நிறுவனத்துக்கு வழிகாட்டியுள்ளனர். வருங்காலத்திலும் அவர்களின் சீரிய பணி தொடருமென எதிர் பார்க்கின்றோம்.

பண்டாரநாயக்கா சருவதேச ஆய்வு நிலையத்தின் பணிப்பாளரான திரு. ரே. போர்ப்ஸ் அவர்களையும் இத்தருணத்தில் பாராட்ட விரும்பு கின்றேன். இந் நிலையத்தின் தரத்தை உயர்த்துவதற்கு அவர் பெரும் பாடுபட்டுள்ளார். அவர் இந் நிலயத்தின் சிறப்புக்கும், கல்விப் புலமைக்கும் பெரும் தொண்டாற்றி உள்ளார். இன்று பட்டம் பெறுகின்ற வர்களே அதனை வலியுறுத்துகின்றனர். அவர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வாழ்த்துக்கள்.

நன்றி.

## ADDRESS OF HIS EXCELLENCY R. PREMADASA PRESIDENT AT THE CONVOCATION OF THE BANDARANAIKE CENTRE FOR INTERNATIONAL STUDIES 22ND SEPTEMBER 1989 – BMICH

I thank you for inviting me to preside over this occasion. This is the 8th Convocation of the Bandaranaike Centre for International Studies. These occasions remind us of the diligence with which you have pursued the study of international relations. I congratulate you on your record of continuity during your thirteen year history. It is an achievement that few other institutions of higher education in our country can equal.

Until recently, the study of international relations was not recognized as a separate discipline in Sri Lanka. I find that your Centre has pioneered a more modern approach. International relations as a separate field of study, as a distinct discipline of its own, is now becoming more widespread in our higher educational system.

A predominant feature of the modern world is its international character. No Nation – No State can isolate itself any more. In today's world, which is so inter-dependent, inward looking countries will remain static and isolated. In this global context, foreign policy now assumes a vital importance. An ignorant or an uninformed foreign policy can damage the image of the country. What is an enlightened foreign policy ? Naturally it has to be a policy which combines national compulsions with international realities.

In the past, foreign policy in Sri Lanka was made by a small group. A few political leaders, a handful of so-called intellectuals, and very few others had a virtual monopoly on policy-making and discussion. Now, thanks to institutions like the B C I S and the rising political consciousness of our people, the interest in foreign policy has broadened. However, this is not enough. We have to widen popular participation in foreign affairs discussions. We have to take foreign policy debates from the clutches of the privileged. We must make it people based. Only then will we have a truly democratic foreign policy approach.

Education is the key to this process. That is why institutions such as the Bandaranaike Centre have an important national purpose. That is why we should encourage the expansion of your activities. That is why we must have more institutions like this throughout the country. International studies must not be confined to Colombo alone ; they must be made available to all our people. They must be available in whatever language they speak. Higher education must not only be available to all but also brought within easy reach of all. Such educational opportunities should be decentralised to the Towns and Villages. For this purpose new constructions are not necessary. During off-school hours, Central School buildings in various parts of the country can be utilised.

When we discuss foreign policy, we must remember one imperative. As I said earlier, foreign policy must be deeply rooted in domestic concerns and compulsions. It must serve the needs of our people and our country. We should not preach abstract virtue to the world, if we do not have it at home. It is worthless and foolish to try to solve the world's problems if we cannot solve our own. Our best contribution

to world affairs is not in proclaiming morality abroad. It is in putting our own house in order with justice. To this end, I must say that our foreign policy is being oriented towards securing the best for our country.

My government is pledged to seek three broad objectives. We seek to :-

**First :** restore peace through consultation, compromise and consensus.

**Second :** enforce discipline through the strict application of the rule of law, restoration of moral values and introduction of codes of conduct.

**Third :** Alleviation of poverty through a programme of restructuring of the political, economic, social and administrative systems.

I am personally pledged to seek these objectives relentlessly. In that quest, foreign relations have a critical part to play. We welcome encouragement, assistance and support from abroad. But we will never compromise our sovereignty or sell our independence to anyone. However far, however close, or however powerful any nation may be, it has no right to aspire to control other nations. It has no right to dictate our policies or maintain an unwelcome presence on our soil. The blood of Sri Lankans, past and present, has not been shed to subordinate our country.

This is a bi-partisan view in Sri Lankan politics. Mrs. Bandaranaike, herself, delivering the Felix Dias lecture in 1987 said :

" There will be no benefit to the states of the Indian Ocean if the withdrawal of great international powers were merely to be an opening for exercises of hegemony

by a regional power over its neighbours . . . We ourselves (she said) are facing the dangers of regional hegemony. "

These are sentiments that all patriotic Sri Lankans can share. This is why we have been working so hard to obtain the withdrawal of the IPKF from Sri Lanka. We have succeeded in principle. We cannot rest until we have fully succeeded in fact. Many other considerations–regional co-operation, elements of national development–have to be subordinated to this end. Let no one doubt our determination. Let those who conspire, at home or abroad, to abridge our national sovereignty beware of the fortitude of the Sri Lankan people. If we follow the Buddhist prescription of right thought and right action we will prevail.

In many ways, our past is a beacon for our future. We have faced many challenges to our sovereignty. Dozens of invasions have taken place. In fact, we may well be one of the most invaded nations in history. We have been occupied for long periods. Yet, the spirit of our people and the essence of our culture has survived.

In the midst of all this tragedy, we built great civilizations. We all know of the vast constructions and engineering feats in old Sri Lanka. Few realize that the social achievements were as great. For example, in the Kandyan Kingdom in the 18th Century, unusual ethnic and religious harmony prevailed. Sinhalese, Tamils, Muslims and even Europeans lived together in peace. Buddhism, Hinduism, Islam and Christianity were respected in a spirit of mutual tolerance. High administrative positions were held by people of all communities. The history of Kandy proves that multi-ethnic and multi-religious concord is nothing new in Sri Lanka. We must aim to recapture these elements of our past.

If we are strong in this way, we can meet any challenge. Our small size and material weakness will not matter. We can face those who are big and strong without fear. As the great sage Gurudev Rabindranath Tagore put it :

Be not ashamed, my brothers,
to stand before the proud and the powerful,
With your white robe of simpleness,
Let your crown be of humility,
Your freedom, the freedom of the soul,
For what is huge is not great
And pride is not everlasting . . . . . . . . . . . . .

This is the only spirit and only approach that can sustain us in the future.

Much of that future will depend on the way we conduct our foreign policy. My Government wants friendship with all. We have hostility to none. We believe in the United Nations and the Non-aligned Movement. May be they have their own shortcomings. These we must strive to put right. We do not favour one bloc or another.

Everyone who graduates from this institution knows a basic truth about international relations. It is that power is never constant. Great powers rise and they fall. This is inevitable. We see it in the world today. When powers fall, it is not strength that matters. What is important then, is the goodwill that a nation enjoys. This is what we in Sri Lanka must develop and cherish.

To do this is not easy. We have gone through a period when too much hatred has spread in our society. It is not enough to enforce change. Change must be change of heart

if it is to endure. A good part of the change of heart comes from right understanding. This, in turn, often comes from correct learning and education.

This is why I am particularly glad to be with you today. The work of the Bandaranaike Centre for International Studies must fulfil the international vision of the statesman after whom it was named. The late Honourable S. W. R. D. Bandaranaike wanted a world of peace – not a world in pieces.

On this occasion, allow me to introduce a personal recollection. I knew the late Honourable S. W. R. D. Bandaranaike from my school days. In fact, I came to know him long before Mrs. Bandaranaike met him. I still recall the day I visited his Colombo residence – "Udugaha Walawwa" at Silversmith Street – now Bandaranaike Mawatha in Hulftsdorp.

In my capacity as Secretary of the Sinhala Literary Union of St. Joseph's College, I invited him to give us a lecture. I told him that we would like him to speak on the topic : "What Contribution can tiny Lanka make to the Mighty World."
(මහා ලෝවකට පුංචි ලංකාව දිය යුත්තේ කුමක්ද ?)

The ideas he expressed still echo in my ears. The essence of it is something like this :

A country is considered large or small *not* by its land area or size of population. It is the moral Values that a country contributes which define its significance. The world always faces many challenges. If tiny Lanka can project its values to the world, it can provide the moral strength to overcome these challenges. To the extent it does so, Lanka becomes mighty, the world becomes tiny.

These memorable sentiments illustrate another feature of Mr. Bandaranaike. In my understanding, he constantly adjusted and developed his ideas to keep pace with changing events. In this intellectual adaptability and policy flexibility are valuable lessons for all of us.

By educating individuals we enlighten them. Enlightened people seek peace. They work for peace. As you engage in these tasks, please remember that your institution must always strive to improve its quality. Your institution must always remain objective and non-political. Only in this way will it reach those high goals to which the late Honourable S. W. R. D. Bandaranaike aspired.

To this end, I urge you to undertake four tasks :

**First :** to continuously upgrade and broadbase your Council of Management ;

**Second :** to supplement your teaching activities with more research ;

**Third :** to consider extending your programmes outside Colombo ;

**Fourth :** to expand the intake and provide for the needs of the under-privileged students.

I am confident that the Council of Management can develop such programmes. They have guided the institution through difficult times. We all expect more good work from them in the future.

Let me also pay a tribute to the Director of the B C I S, Mr. Ray Forbes. He has contributed significantly to raising the standards of this Centre. He has enhanced its integrity and its scholarship. The quality of the men and women who graduate today testify to this. I wish them all success.

I thank you.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
26 AUG 2023
පුස්තකාලය

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කරන ලදී

PUBLISHED BY THE
PRESIDENTIAL PRESS SECRETARIAT

Printed By The Government Press